In the Court of the Principal District and Sessions Judge, Dindigul

S.C.No. 163/2023

Prosecution witness P.W.6

Name: Mariammal

Calling:

Father Name:

Religion:

Village:

Caste:

Taluk:

Age:

Solemnly affirmed in accordance with the provisions of Indian Evidence Act X of 1873 on the day of 15-04-2025.

**(Accused 1 produced through V.C. A4, 6 are produced. A3, A5, A7, A8, A9 are present.)**

முதல் விசாரணை :-

திண்டுக்கல் வ.உ.சி.நகரில் வசிக்கிறேன். அசா1 என் மருமகள். சம்பவத்தில் இறந்தவர் என் மகன். சுமார் 2. வருடத்திற்கு முன்பு ஆடி மாதம் ஒரு நாள் என் மகன் என் பேரனை தூக்கிக்கொண்டு கிரிக்கெட் விளையாடி வருவதாகச் சொல்லிச் சென்றான். திரும்ப வீட்டிற்கு வரவில்லை. நானும் என் மருமகளும் வீட்டில் இருந்தபோது இரவு 7.30 மணியளவில் சுதன்பிரபு என் பேரனை தூக்கிக்கொண்டு வீட்டுக்கு வந்து பேரனை கொடுத்துவிட்டு விமலா ஆஸ்பத்திரி அருகே என் மகன் சரவணனை வெட்டிக்கொன்றுவிட்டதாகச் சொன்னார். யார் வெட்டிக்கொன்றார்கள் என்று சொல்லவில்லை. நானும் என் மருமகளும் குழந்தையை தூக்கிக்கொண்டு சம்பவ இடத்திற்கு போனோம். என் மகன் உடம்பு முழுவதும் காயங்களுடன் குப்புறக்கிடந்தான். அழுது கொண்டிருந்தோம். எல்லோரும் வந்துவிட்டார்கள். ஆம்புலன்ஸ் வந்தது. அதில் ஏற்றி திண்டுக்கல் அரசு மருத்துவமனை கொண்டுபோனோம். நடந்த சம்பவத்திற்கு என் மருமகள் காவல் நிலையம் சென்று புகார் செய்தார். நானும் காவல் நிலையத்திற்கு போயிருந்தேன். என் மகனை மறுநாள் அடக்கம் செய்தோம். என் மகனுக்கு யாருடனும் பகை இல்லை. என் மகனை யார் கொலை செய்தார்கள் என நான் கேள்விப்படவில்லை. என்னை போலீசார் விசாரிக்கவில்லை.

(அரசு தரப்பு வழக்கறிஞர் சாட்சியை பிறழ் சாட்சியாகக் கருதி குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரி, அனுமதிக்கப்பட்டது)

குறுக்கு விசாரணை (அரசு தரப்பில்)

போலீசார் என்னை விசாரித்தபோது, இறந்த சரவணன் தனது மகன் என்றும், சரவணன் மனைவி மற்றும் மகனுடன் நானும் ஒய்எம்ஆர்.பட்டி வ.உ.சி நகரில் ஒன்றாக வசித்து வருகிறோம் என்றும், அவர் ஒய்எம்ஆர்.பட்டி குளத்தின் அருகில் மீன்கடை வைத்து வியாபாரம் செய்து வந்தார் என்றும், 20.07.2023ம் தேதி மாலை 06.30 மணியளவில் அவனது குழந்தையை தூக்கிக்கொண்டு அண்ணாநகர் தைலக்காட்டில் கிரிக்கெட் விளையாட செல்வதாக கூறி வண்டியில் சென்றான் என்றும், பின்னர் மாலை 07.30 மணியளவில் சுதன்பிரபு குழந்தையுடன் பதட்டமாக வந்து சரவணன் அண்ணனை விமலா ஆஸ்பத்திரி ரோட்டில் மாலை சுமார் 07.15 மணியளவில் வடக்கிலிருந்து தெற்காக வந்தபோது பைக்கிலும், காரிலும் வந்தவர்கள் என் மகனை வெட்டி கொலை செய்துவிட்டதாக சொன்னார் என்றும், உடனே நானும் என் மருமகள் பவதாரிணியும் மற்றும் உறவினர்களும் சம்பவ இடத்திற்கு சென்று பார்த்தபோது என் மகன் பின்தலை சிதைந்த நிலையில் ரத்தவெள்ளத்தில் கிடந்தான் என்றும் போலீசார் பிரேதத்தை கைப்பற்றி தனியார் ஆம்புலன்ஸ் மூலம் திண்டுக்கல் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார்கள் என்றும், பின்னர் சுமார் 11.30 மணியளவில் திண்டுக்கல் நகர் வடக்கு காவல் நிலையம் வந்து புகார் கொடுத்தோம் என்று சொல்லியுள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. தற்போது எதிரிகளை இந்த வழக்கிலிருந்து காப்பாற்ற உண்மையை மறைத்து பொய்சாட்சி சொல்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**–வழக்கறிஞர்கள் ஆஜராகி குறுக்கு விசாரணை இல்லை எனக்கூறினார்கள்.

A MUTHUSARATHA

Digitally signed by A MUTHUSARATHA
Date: 2025.04.15 15:55:59 +0530

Principal District Judge,
Dindigul.